**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.23** |
| **Name** | **:** | **திரு. கோதண்டபாணி** |
| **Father's Name** | **:** | **திரு. பொன்னுசாமி** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 1 முதல் 6 ஆஜர். எதிரிகள் 7 முதல் 10 ஆஜரில்லை. எதிரிகள் 7 முதல் 10 வரையிலான எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.03.2024.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது ஓய்வு பெற்ற உதவி காவல் ஆய்வாளர். கடந்த 21.01.2017 அன்று தூசி காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக நான் பணியலிருந்த போது, காலை 11.00 மணிக்கு வயலாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சுசீலா, க/பெ. ஜெகநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த**

புகார் மனுவினை பெற்று தூசி காவல் நிலைய குற்ற எண்.26/2017, சட்டப்பிரிவுகள் 147, 148, 302 இ.த.ச. வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கை நீதிமன்ற நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் தான் சுசீலா என்னிடம் கொடுத்த புகார். புகார் அ.த.சா.ஆ-.30-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.31-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இந்த வழக்குச் சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

தூசி காவல் நிலையத்திலிருந்து காஞ்சிபுரம் மருத்துவமனை எவ்வளவு தூரம் என்றால் 8 கி.மீ. தூசியிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அதிகப்படியான பேருந்து வசதிகள் உள்ளது என்றால் சரிதான். தூசி காவல் நிலையம் என்பதே செய்யாறு - காஞ்சிபுரம் செல்லும் பிரதான சாலையிலேயே தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். தூசி காவல் நிலையத்திலிருந்து செய்யாறு நகரம் எவ்வளவு தூரம் என்றால் 17, 18 கி.மீ. தூரம் இருக்கும்.

தூசியிலிருந்து செய்யாறுக்கும் 24 மணி நேரமும் பேருந்து வசதி உள்ள சாலை தான் என்றால் சரிதான். செய்யாறு நீதித்துறை நடுவர் குடியிருப்பு மற்றும் நீதிமன்றம் என்பது செய்யாறு பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ. தூரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்தவருக்கு முதல் தகவல் அறிக்கை நகல் வழங்கப்பட்டதற்கான அதற்கான காலத்தில் ஒப்புகை ஏதும் இல்லை என்றால்

சரிதான், அவசர நிலையிலும் பதட்டத்திலும் அவர்களும் கேட்கவில்லை, நாங்களும் செய்யவில்லை.

புகாரில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படும் 21.01.2017 அன்று காலை 11.00 மணியளவில் அ.சா.1 சுசீலா என்பவர் எங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என கூறப்படுவது வழக்கிற்காக கூறப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. புகாரில் மேற்குறிப்பில் 13.00 என எழுதப்பட்டு 11.00 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் 11.00 என்பது சரியானது, எழுதும் போது தவறாகிவிட்டது, முதல் தகவல் அறிக்கையில் 11.00 என்று தான் எழுதப்பட்டுளள்து.

புகாரில் 20.01.2017 இரவு 9.00 மணியளவில் என்று எழுதியிருப்பதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் புகார் கொடுத்தவர் திருத்தம் செய்திருப்பதற்கு நாங்கள் சொல்ல முடியாது. எழுதும் போது அப்போது பேனா எழுதாமல் போனால் கூடி மேற்கண்ட தவறு ஏற்படுவது சகஜம். புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது, யாரால் எழுதப்பட்டது என்பதற்கு குறிப்பு இல்லை என்றால் எழுதி கொண்டு வந்ததை நான் பெற்றேன்.

புகாரில் குடியரசு தினம் வந்ததாகவோ, குடியரசு தினத்தன்று ஞானவேல் என்பவர் சுசீலாவை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, சுசீலாவின் தலைமுடியை பிடித்து இழுத்ததாகவோ, அமுலரசி, நவநீதம் மற்றும் தீபா ஆகியோர் மேற்படி சசீலாவை தலைமுடியை பிடித்து இழுத்தார்கள் என்றோ, ஞானவேல், இளையவேல், நாகப்பன், தனசேகரன், அமுலரசி, தீபா, நவநீதம், நீலா ஆகியோர் ( அ.சா.1 குறுக்கு விசாரணை முடியாததாலும், அ.சா.1 இன்று குறுக்கு விசாரணைக்காக ஆஜர் ஆகியுள்ளதாலும் இந்த சாட்சியம் நிறுத்தி

**வைக்கப்படுகிறது)**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.